Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT,
BODINAYAKANUR

**STC No.744/2023**

Depositions of பால்பாண்டியன்.witness for ...Prosecution Side Witness -2 (LW- 2 )

| | | |
|---|---|---|
| Name | - | பால்பாண்டியன் (PW- 2 ) |
| Father's and Husband's name | - | |
| Village | - | |
| Taluk | - | |
| Caste | - | |
| Calling | - | முதல்நிலை காவலர் 805 |
| Religion | - | |
| Age | - | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12.02.2024.

**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**(1, 4 வது எதிரிகள் ஆஜர். 2, 3 வது எதிரிகள் ஆஜர் இல்லை. 2, 3 வது எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை-**

நான் தற்போது போடி நகர் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.02.2023 ம் தேதி காலை 09.00 மணியளவில் , குற்றம் மற்றும் சட்டம் ஒழுங்கு சம்பந்தமாக நானும், சார்பு ஆய்வாளர் மணிகண்டன், முதல்நிலை காவலர் 323 வீரமுத்து என்பவரும் ரோந்து சென்றபோது, போடி நகர் தேவர் சிலை அருகே , மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, ப்ளக்ஸ் பேனர் எவ்வித அனுமதியும் இன்றி, நகர் அழகு சீர்குலைவு ஏற்படுத்தும் அளவில்

வைக்கப்பட்டிருந்தது. விசாரித்ததில் போடி முந்தலை சேர்ந்த மணி , ஞானவேல், பெரியசாமி, நிவேதன் மற்றும் தர்மர் ஆகியோர்கள் வைத்தாக தகவல் கிடைத்தது. இது சம்பந்தமாக நிலையம் சென்று காலை 10.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் அவர்கள், எதிரிகள் மீது TNOPPDL Act வழக்கு பதிவு செய்ய நான் உதவியாக இருந்தேன். வழக்கு சம்பந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை</u>

எனது தனிப்பட்ட வேலைதொடர்பாக இல்லாமல் எனது அலுவலக பணி தொடர்பாக எந்தவொரு அலுவலாக சென்றால் எங்களுக்கு வழங்கப்பட்ட பாக்கெட் டைரியில் (நோட்புக்)எழுத வேண்டும் என்று காவல்நிலைய ஆணையில் உள்ளது என்றால் சரிதான். நான் மற்றும் முதல் நிலை காவலர் மற்றும் சார்பு ஆய்வாளர் செல்லும் போது எனது பாக்கெட் நோட்டில் குறித்து வைத்தேனா என்றால் குறித்து வைக்கவில்லை. எங்கிருந்து சம்பவ இடத்திற்கு சென்றேன், எதில் சென்றேன் என்றால் போடி நகர் காவல்நிலையத்தில் இருந்து சென்றேன். தேவர் சிலை அமைந்திருக்கும் பகுதி போடிநாயக்கனூரில் ஒரு முக்கியமான பகுதி என்றால் சரிதான். முதல் விசாரணையில் நான் கூறும் போது தேவர் சிலைக்கு அருகில் என்று கூறியுள்ளேன், தேவர் சிலைக்கு முன்புறமாக காமராஜர் வீதி என்ற பஜார் உள்ளது என்றால் சரிதான். தேவர்சிலைக்கு பின்புறம் பெரியாண்டவர் ைஹரோடு உள்ளது என்றால் சரிதான். தேவர் சிலைக்கு பின்புறம் உள்ள பெரியாண்டவர் ைஹரோடு பின்புறம் 24 மணி நேரமும் இயங்கும் ஒரு பூத் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதுபோல் புறக்காவல் நிலைய பூத்தை ஒட்டி பேருந்து நிலையத்தின் நுழைவு வாயில் உள்ளது என்றால் சரிதான். தேவர் சிலையின் மேற்குப்பகுதியில் சார்பு பதிவாளர் அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். தேவர் சிலைக்கு கிழக்குப்புறம் கென்னடி ஜவுளிக்கடை உள்ளிட்ட தொழில் நிறுவனங்கள் உள்ளது என்றால் சரிதான். இந்த தேவர் சிலை அமைந்துள்ள பகுதியானது எப்போதும் ஆள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையில் தேவர் சிலை அருகில் என்று கூறியுள்ளேன் என்றும், எந்த இடத்தில் அழகு சீர்குலைவு ஏற்பட்டு என்று

குறிப்பிட்டு போலிசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. மேற்படி இடம் பொதுமக்களுக்கு சொந்தமான தனியாருக்கு சொந்தமான இடமாக இருந்தது என்றும் பொதுமக்களுக்கு பயன்படும் இடமாக இருந்தது என்றும் கூறியுள்ளேனா ன்றால் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு போவதற்கு முன்பே பிளக்ஸ் வைக்கப்பட்டிருந்ததா, அல்லது போன பின்னர் வைக்கப்பட்டதா என்றால் போகும் முன்பே வைக்கப்பட்டிருந்தது. மேற்படி பிளக்ஸை யார் மேற்படி இடத்தில் ஊன்றினார்கள் என்று எங்களுடன் வந்த சார்பு ஆய்வாளர் விசாரித்துதெரிந்து கொண்டாரா என்றால் என் முன்னிலையில் விசாரித்து தெரிந்துகொண்டார். யார் ஊன்றினார்கள் என்றால் சார்பு ஆய்வாளருக்கு தான்தெரியும். பிளக்ஸ் எந்த கடையில் அடிக்கப்பட்டிருந்தது என்ற விவரத்தை அந்த பிளக்ஸை பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் மேற்படி பிளக்ஸில் அதற்குண்டான விவரங்கள் இல்லை என்பதால் தெரிந்துகொள்ளவில்லை. அழகு சீர்குலைவு ஏற்பட்டதாக சொல்லும் பிளக்ஸை சார்பு ஆய்வாளர் கைப்பற்றினாரா என்றால் கைப்பற்றவில்லை. இந்த பிளக்ஸ் எந்த கடையில் அடிக்கப்பட்டது என்பது பற்றி சார்பு ஆய்வாளர் தெரிந்து கொண்டாரா என்றால் தெரியவில்லை. ஒரு அரசியல் கட்சி தொடர்பாக பேனர் அடிக்கப்பட்டால் அந்த கட்சியின் மாநில நிர்வாகிகள் மாவட்ட நிர்வாகிகள் மற்றும் கட்சியின் இதர நிர்வாகிகளின் முக்கிய பொறுப்பில் இருப்பவர்களின் பெயர் மற்றும் புகைப்படம் வைப்பது என்றால் சரிதான். இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள நான்கு நபர்களும் அமமுக கட்சியில் முக்கிய பொறுப்பில் இருக்கும் நபர்கள் ஆவார்கள் என்றால் சரிதான். இந்த எதிரிகள் எவ்விதமான பேனரோ, விளம்பரமோ செய்து நகரின் அழகு சீர்குலைவை கெடுக்கும் விதமாக எந்த குற்றமும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் நால்வரும் கட்சியில் முக்கியமான பொறுப்பில் இருப்பதால் கட்சியின் உறுப்பினர்களின் யாராவது பேனரோ, எதுவும் அடித்திருந்தால் அவர்கள் குறித்து எவ்வித முகாந்திரமும் இல்லாததாலும் ஆளும் கட்சியின் எதிர்ப்பினாலும் இந்த வழக்கு பொய்யாக புனையப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கு உண்மையான வழக்காக இருந்திருந்தால் , இந்த வழக்குதொடர்பாக எனதுநோடட்புக்கில் குறித்திருப்பேன் என்றால் சரியல்ல. இந்த

வழக்கு தொடர்பாக என்னுடன் வந்த சார்பு ஆய்வாளர், பக்கத்தில் இருந்த பத்திர ஆபிஸிலோ மற்றவர்களையோ விசாரித்தார்கள் என்றால் விசாரித்தார்கள். வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court,
and read over to the witness and
admitted by the deponent to be correct.

G K VELUMAYIL

Digitally signed by G K VELUMAYIL
Date: 2024.03.04 18:54:11 +0530

Judicial Magistrate,
Bodinayakanur.

Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT,
BODINAYAKANUR

**STC No.744/2023**

Depositions of மணிகண்டன் .witness for ...Prosecution Side Witness -3 (LW- 3 )

| | |
|---|---|
| Name | - மணிகண்டன் (PW- 3 ) |
| Father's and Husband's name | - |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - சார்பு ஆய்வாளர் |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12.02.2024.

**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**(1, 4 வது எதிரிகள் ஆஜர். 2, 3 வது எதிரிகள் ஆஜர் இல்லை. 2, 3 வது எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை-**

நான் தற்போது போடி தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2023ம் ஆண்டு போடி நகர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது, 22.02.2023ம் தேதி காலை 09.00 மணிக்கு, போடி நகர் காவல்நிலைய சார்பு ஆய்வாளராகிய நான், முதல் நிலை காவலர் 323 வீரமுத்து, 805 பால்பாண்டியன் ஆகியோர்கள் போடி நகர் பகுதியில் சட்ட ஒழுங்கு நடவடிக்கைகாக ரோந்து அலுவல் செய்து வரும்போது, பின்னர் பெயர் விலாசம் கேட்டுத்தெரிந்து கொண்ட அமமுக

கட்சியை சேர்ந்தவர்களான போடி நகர செயலாளர் மணி, பெரியசாமி, தர்மர், எஸ்விஎஸ் ஞானவேல், நிவேந்திரன் மற்றும் அக்கட்சியை சேர்ந்த சிலரும், முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்களின் பிறந்தநாளை கொண்டாடும் விதமாக போடிதேவர் சிலைக்கு அருகில் எந்தவித அரசு அனுமதியும் இன்றி பிளக்ஸ்பேனர் வைத்து , அழகு சீர்குலைவு ஏற்படுத்தியுள்ளார்கள். அதன்பின் நிலையம் வந்து போடி நகர் காவல்நிலைய குற்ற எண் 51/2023 பிரிவுகள் 4 (A-1a) TNOPPDL Act ன் பிரகாரம் வழக்கு பதிவுசெய்தேன். முதல் தகவல்அறிக்கை அதசாஆ. **1.** சாட்சிகளை தனித்தனியே விசாரித்து குவிமுச 161(3) ன் வாகுமூலம் பதிவு செய்தேன். பின்பு புலன்விசாரணையில் தர்மர் மற்றும் சிலர் சம்பந்தப்படவில்லை என்ற தெரிந்து பெயர் நீக்கம் செய்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை செய்தேன். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அதசாஆ.**2.** பின்னர் நான் பணிமாறுதலில் சென்றதால் காவல்நிலைய அதிகாரியிடம் ஒப்படைத்து விட்டு சென்றேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கு தொடர்பாக என்னால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை நான் எப்போது நீதிமன்றத்திற்கு அனுப்பினேன் என்றால் மறுநாள். என்னால் தயார் செய்யப்பட்ட முதல் தகவல்அறிக்கையில் சம்பவம் நடந்ததாக சொல்லும் 22.02.2023 ம் தேதியில் நீதிமன்றத்திற்கு அனுப்பபட்டதாக சொல்லப்பட்டுள்ளது. அந்த 22.02.2023 ம் தேதி எந்தநேரம் என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் மறுநாள் 23.02.2023 ம் தேதி அனுப்பியதற்கு எவ்வித குறிப்பும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையில் இல்லை என்றால் சரிதான். 15.06.2023 ம் தேதி தான் நீதிமன்றத்திற்கு முதன்முதலாக முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்தால் பெறப்பட்டுள்ளதாக குறிப்புகள் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் 22.02.2023 ம் தேதியே நீதிமன்றத்திற்கு முதல் தகவல்அறிக்கை அனுப்பியதாக பொய்யாக என்னால் ஒரு குறிப்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நாங்கள் சம்பவம் இடம் செல்லும் போதே பேனர்

வைக்கப்பட்டதா என்றால் ஆமாம். சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்குசென்றேன் என்றால் 09.15 மணிக்கு. மேற்படி பேனர் எத்தனைக்கு எத்தனை அளவு கொண்டது என்பதற்கு என்னுடன் வந்த காவலர்கள் மூலமாகவோ, தனி நபர் சாட்சிகள் மூலமாகவோ விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் சரியாக ஞாபகமில்லை. முதல் தகவல் அறிக்கை பாரா 3 ல் குற்ற நிகழ்வு நாள் 22.02.2023 நேரம் 09.00 மணி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றும் சம்பவம் நடைபெற்றது என எதனடிப்படையில் 09.00 மணி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் 09.00 மணிக்கு பிளக்ஸ் பேனராக வைக்கப்பட்டதாக தகவல் தெரிந்ததால் அந்தநேரத்தை குறிப்பிட்டுள்ளேன். எனக்கு நான் காவல்நிலையத்தில் இருக்கும் போதே சம்பவம் நடைபெற்றதாக தகவல் கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் காலம் பி யில் தகவல் கிடைத்த நாள் பத்து மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தகவல் கிடைத்தது 9 மணிக்கு, தகவல் கிடைத்த நேரம் 10 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 9 மணிக்கு தகவல் கிடைத்து சம்பவ இடம் சென்று பார்வையிட்டு முதல் தகவல் அறிக்கை தபிவு செய்வதற்கு நேரம் என்பதால் 10 மணி என்று குறிப்பிட்டுள்ளேன். பொதுநாட்குறிப்பில் எத்தனை மணிக்கு தகவல் பதிவு செய்யப்பட்டதாக அச்சுப்பாரா முதல் தகவல்அறிக்கையின் உரிய பாரத்தில் உரிய காலத்தில் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் 8 ல் காலதாமதத்திற்கான காரணம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தேவர்சிலை என்பது போடிநாயக்கனூரில் முக்கியமான பகுதி என்றால் சரிதான். வழக்கில் விசாரிக்கப்பட்ட 2 சாட்சிகள் தேவர் சிலை அருகில் உள்ள ஒரு இடத்தில் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தேவர் சிலை எப்போதுமோஆட்கள் நடமாட்டம் அதிகம் உள்ளபகுதி என்றால் சரிதான். தேவர்சிலைக்கு பின்பு 24 மணிநேரம் செயல்படக்கூடிய புறக்காவல்நிலையம் ஒன்று உள்ளது என்றால் சரியல்ல. பேருந்து வெளியேறும் இடத்திற்கு அருகில் நகர் காவல்நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட புறக்காவல்நிலையம் இடம் ஒன்று உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் போக்குவரத்து மற்றும் வேறு எந்த சீர்கேடுகள் ஏற்படாத வண்ணம் நகரின் முக்கிய

பகுதி என்பதால் பாதுகாப்பிற்காக சுழற்சி முறையில் 24 மணி நேரமும் காவலர்கள் இருப்பார்கள் என்றால் சரியல்ல. 24 மணி நேரமும் காவலர்கள் இருப்பார்கள் என்றும், மேற்படி விவரத்தை கூறினால் இ ந்த வழக்கில் அரசு தரப்பு வழக்கில் பாதிப்பு ஏற்படும் என்பதால் அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் கடையில் உள்ள ஆட்களையோ பொதுமக்களையோ விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். ஒரு வழக்கு தொடர்பாக எந்த ஒரு சாட்சியத்தையோ விசாரித்தால் காவல்நிலைய ஆணைகளின் படி அவர்களது குவிமுச 161ன் கீழான வாக்குமூலத்தை பதிவு செய்யவேண்டும் என்றும் இந்த வழக்கில் அவ்வாறு எதுவும் பதிவு செய்தேனா என்றால் பதிவு செய்யவில்லை. நான் விசாரித்த பதிவு செய்யாத நபர்களின் பெயர்களை வழக்கு நாட்குறிப்பில் குறித்து வைத்துள்ளேனா என்றால் வைக்கவில்லை. ஒரு வழக்கு குறித்து விசாரணை மேற்கொள்ளும் அதிகாரி அதுகுறித்தான விவரங்கள்அனைத்தையும் வழக்கு நாட்குறிப்பில் குறித்து வைக்கவேண்டும் என்றும் அவ்வாறு இந்த வழக்கில் நான் சரியாக விசாரிக்காததால் தான் அதற்கான விவரங்களை எனது வழக்கு நாட்குறிப்பில் குறித்துவைக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் அழகு சீர்குலைவு ஏற்படுத்திய பேனரை நான் கைப்பற்றினேனா என்றால் கைப்பற்றவில்லை. மேற்படி பிளக்ஸை எந்த கடையில் அடித்தாரர்கள் என்றும், யார் அடித்தார்கள் என்றும் விசாரித்தேனா என்றால் பிளக்ஸ் அடித்த நபர்களின் பெயர்கள் அதில் இல்லை. நான் பிளக்ஸை கைப்பற்றாததாலும், சம்பவ குறித்து சம்பவ இடம் மற்றும் சம்பவ குறித்து துல்லியமாக சொல்லாததாலும், காவல்நிலைய புள்ளிவிவர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. நான் ஆளுங்கட்சிக்கு ஆதரவாக செயல்பட்டு எதிர்கட்சிக்கு எதிராக போடப்பபட்ட வழக்கு என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நீக்கப்பட்ட எதிரிகள் எதன் அடிப்படையில் நீக்கப்பட்டார்கள் குறித்தான விவரங்கள் வழக்கு ஆவணங்களில் இல்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் குறிப்பிட்ட நான்கு நபர்களும் அமமுக கட்சியில் முக்கிய பொறுப்பில் உள்ள பொறுப்பாளர்கள் என்று சொன்னால் சரிதான். அமமுக கட்சியில் உள்ள உறுப்பினர்கள் பெயர் தெரியாததால் , நகர நிர்வாகிகள் மீது இவ்வழக்கு புனையப்பட்டுள்ளது

என்றால் சரியல்ல. நான் விசாரித்த சாட்சிகளின் அடிப்படையில் நகர செயலாளர் மணி என்று தெரிந்துகொண்டேன் என்றால் விசாரித்து தெரிந்துகொண்டேன் . 3வது எதிரி ஞானவேல் என்பவர்தான் நகர செயலாளராக இருந்து வந்தார் என்றால் முன்னாள் இருந்தார். இந்த வழக்கில் முன்பிருந்து, தற்போது வரை 3வது எதிரிதான் நகர செயலாளராக இருந்து வருகிறார் என்றும் மேற்படி விவரங்களை சொன்னால் இந்த வழக்கிற்கு பாதிப்பு ஏற்படும் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court,
and read over to the witness and
admitted by the deponent to be correct.

G K VELUMAYIL

Digitally signed by G K VELUMAYIL
Date: 2024.03.04 18:54:30 +0530

Judicial Magistrate,
Bodinayakanur.